recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

(3) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு

MR. CHAIRMAN : In partial modification of the programme of business of the Council, the Business Advisory Committee at its meeting held today has decided that the discussion on the Policy Note on Industries will take place on the 28th March and the discussion on the Policy Note on Local Administration will take place on the 4th April 1974.

3. கவன ஈர்ப்பு.

திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீசர்வ சக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் அகற்ற முயற்சித்ததால் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீ சர்வசக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் 14—3—1974 அன்று அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் மேல் கூரையைப் பிரிக்க முயன்றதன் விளைவாகப் பொது மக்களிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருப்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 12—9—1972 அன்று அறநிலைய பாதுகாப்பு அமைச்சரின் அறையில் நடந்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், உள்ள நடைபாதை கோவில்களினால் ஏற்படும் இடையூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டு அனுமதியில்லாமல் நடைபாதைகளில் கோவில்கள் கட்டப்படுவதைத் தடுக்க, நகராட்சி, மாநகராட்சி ஆணையர்களுக்கு ஆணை பிறப்பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நகராட்சி, மாநகராட்சி ஆணையர்கள், தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் நடைபாதைகளில் ஆக்ரமிப்பு செய்து அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கோவில்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து அரசு ஆணை எண் 1932, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 28—5—1973-ல் தக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.